*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.392/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 (LW–1)***

*Name / Father's Name:* ***திருமதி.குமுதா க/பெ. அஜித்குமார்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **17.07.2026.**
துவக்க நேரம் 12.50 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி (சிவபெருமாள்) ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கலரம்பட்டி கிராமத்தில் வசித்து, புத்திரகவுண்டம் பாளையத்தில் உள்ள வித்ய வித்யாலயா பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். சென்ற ஆண்டு நான் வாழப்பாடி அருகில் உள்ள பழனியாபுரத்தில் உள்ள கோகுல் மெட்ரிக் பள்ளில் ஆசிரியராக பணிபுரிந்தேன். கடந்த 04.03.2025 அன்று காலை 08.30 மணிக்கு எங்களது பள்ளி வேனில் கலரம்பட்டி– அண்ணாநகருக்கு நான் சென்று கொண்டிருந்தேன்.

2) நான் சென்ற வேனில் எங்களது பள்ளியை சேர்ந்து 10 மாணவர்கள் இருந்தார்கள். அப்போது அண்ணாநகரில் சென்று கொண்டிருந்தபோது மேற்படி வாகனத்தின் ஓட்டுநருக்கு சிறிது மயக்கம் வந்ததது போல் இருந்தது. அதனால், அவர் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல், அங்கு வலது புறம் இருந்த வீட்டில் மோதி, பின்னர் அந்த பக்கத்தில் இருந்த பள்ளத்தில் வாகனத்தை கவிழ்த்துவிட்டார்.

3) வாகனம் கவிழ்ந்ததில் வாகனத்தில் இருந்த எனக்கு தலையிலும், மாணவர்களுக்கு உடலில் காயம் ஏற்பட்டது. நானும், என்னுடன் ரம்யா என்ற ஆசிரியரும் இருந்தார். அவருக்கு அடி எதுவும் படவில்லை, அவரது குழந்தைக்கு அடிப்பட்டது.

4) அருகில் இருந்தவர்கள் எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆரியப்பாளையத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அரசு மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்ட போது விபத்தில் காயம்அடைந்த குழந்தைகள் சிலருக்கு காயம் அதிகமாக இருந்ததால் வாழப்பாடியில் உள்ள பாலா மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள்.

5) பின்னிட்டு போலீசார் வந்து என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார்தாரர் கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இருந்தும், குறுக்கு விசாரணை செய்யவில்லை. என்பதால் எதிரி தரப்பில் அரசு தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பு முடித்து வைக்கப்படுகிறது.**

முடிவு நேரம் 01.05 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.17 18:08:48 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.392/2025***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***திருமதி.ரம்யா க/பெ. காளிதாசன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **16.07.2026.**
துவக்க நேரம் 01.05 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி (சிவபெருமாள்) ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உமயால்புரத்தில் குடியிருந்து, வாழப்பாடி அருகில் உள்ள பழனியாபுரத்தில் உள்ள கோகுலம் மெட்ரிக் பள்ளியில் ஆசிரியை ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.03.2025 அன்று காலை 08.30 மணிக்கு எங்களது பள்ளி வேனில் உமயால்புரம்- அண்ணாநகருக்கு நான் சென்று கொண்டிருந்தேன்.

2) நான் சென்ற வேனில் எங்களது பள்ளியை சேர்ந்த என்னுடன் பணியாற்றும் குமுதா என்ற ஆசிரியையும், மேலும் எங்களது பள்ளியை சேர்ந்த சுமார் 10 மாணவர்களும் இருந்தார்கள். அப்போது அண்ணாநகரில் சென்று கொண்டிருந்தபோது செந்தில் குமாரின் வீட்டிற்கு அருகே சென்று கொண்டிருந்தபோது எதிரி சிவபெருமாள் என்பருக்கு சிறிது மயக்கம் வந்ததது போல் இருந்தது. அதனால், அவர் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல், அங்கு வலது புறம் இருந்த செந்தில்குமார் என்பவரின் வீட்டில் மோதி வாகனம் விழுந்தது.

3) வாகனம் விழுந்ததில் எனக்கு வலது பக்க கையிலும், மற்ற மாணவர்களுக்கு உடலிலும் காயம் ஏற்பட்டது. அருகில் இருந்தவர்கள் எங்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆரியப்பாளையத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள்.

4) பின்னிட்டு போலீசார் வந்து என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்து என்னுடன் பணியாற்றி குமுதா என்ற ஆசிரியையிடம் போலீசார் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இருந்தும், குறுக்கு விசாரணை செய்யவில்லை. என்பதால் எதிரி தரப்பில் அரசு தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பு முடித்து வைக்கப்படுகிறது.**

முடிவு நேரம் 01.15 A.N

Taken Down by me in Open Court Read over to the deponent in the presence of the accused and admitted by the deponent to be correct

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.17 18:09:03 +0530

Judicial Magistrate No.2, Attur.